**IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTICT.**

DEPOSITION OF WITNESS
**SC.No.69/2020, PW-13**

| | |
|---|---|
| Name | இளம்பகவத். |
| Husband/Father Name | கந்தசாமி. |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 12.06.2024.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொது நூலகத்துறை, சென்னையில் இயக்குநராக பணிபுரிகிறேன். 2019 ம் ஆண்டு நான் இராணிப்பேட்டை, சார் ஆட்சியராக பணிபுரிந்த போது, 18-09-2019 ம் தேதி இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் இருந்து கு.வி.ச பிரிவு 174 படி குற்ற எண்.576/2019 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மாலை 4.30 மணியளவில் வரப்பெற்றது. முதல் தகவல் அறிக்கையில் வாலாஜா வட்டம், அனந்தளி மதுரா, வைரா காலணி என்ற குடியிருப்பில் வசித்து வரும் திரு.தனலட்சுமி க/பெ. செல்வம் என்பவர் திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள் இறந்துவிட்ட காரணத்தினால், அவரது உடல் கைப்பற்றபட்டு, வாலாஜா அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருப்பதாகவும், அது குறித்து விசாரணை செய்யும்படி கோரிக்கை பெற்றேன். அதன் அடிப்படையில் அன்று மாலை 4.40

மணியளவில் வாலாஜா அரசு மருத்துவமனை சென்று, சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். அது சம்மந்தமான என்னுடைய புலனாய்வு அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும். அதன் பிறகு 21-09-2019 அன்று இறந்து போன திருமதி.தனலட்சுமியின் கணவர் திரு.செல்வம், புகார்தாரர் திரு.கண்ணன், இறந்தவரின் மாமியார் பாப்பாத்தி, பஞ்சாயத்தார்கள் முனிசாமி, மார்க்கபந்து, பெருமாள், கிருஷ்ணன், தொம்மரதாத்தா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இறந்தவரின் கணவர் திரு.செல்வம் அவர்கள் 18-09-2019 ற்கு முந்தைய நாள் இரவு அவருக்கும், அவரது மனைவி தனலட்சுமிக்கும் சண்டை நடந்ததாகவும், அந்த சண்டையின் போது அவர் அவருடைய மனைவியை தோள்பட்டையில் அடித்ததாகவும், அப்போது அவருடைய மனைவி நிலைக்குலைந்து அருகில் இருந்து இரும்பு பீரோவில் கைப்பிடியில் தலை மோதி, அருகில் இருந்த செங்கல்லிலும் மோதி கீழே விழுந்ததாகவும் தெரிவித்தார். அதன் பிறகு அவர் தூங்க சென்றுவிட்டதாகவும், சிறிது நேரம் கழித்து எழுந்த போது மனைவி அசைவற்ற கிடந்ததாகவும், அப்போது முகத்தில் தண்ணீர் ஊற்றி எழுப்ப முயற்சி செய்ததாகவும், எழுந்திருக்காத காரணத்தினால் மனைவி இறந்திருப்பதாக கருதி பதற்றம் கொண்டதாக தெரிவித்தார். இதன் பிறகு, அருகில் உள்ளவர்களை அழைக்கலாம் என்று நினைத்ததாகவும், அவ்வாறு அழைத்தால் மனைவியை அடித்து கொலை செய்துவிட்டதாக கருதுவார்கள் என்று நினைத்து, மனைவியின் புடவை ஒன்றை எடுத்து, வீட்டின் பேன் அருகில் உள்ள விட்டத்தில் கட்டி, மனைவியை நேராக நிமிர்த்தி பக்கத்தில் இருக்கும் ஒரு மரத்தில் இழுத்து கட்டிவிட்டதாகவும், மனைவியின் கால் தரையில்

படாத அளிவிற்கு கட்டியதாகவும், அப்போது மனைவியின் உடலில் அசைவு இல்லை என்று தெரிவித்தார். அதிகாலை 4 மணியளவில் தன் குழந்தையை தன் அண்ணன் முருகனிடம் கொடுத்து விட்டு, வீட்டை உள்பக்கமாக முயற்சி செய்து தாழிட்டுவிட்டு, வாலாஜாவில் பேருந்து வழியாக காஞ்சிபுரம் செல்ல முயன்றதாகவும், செல்லும் வழியிலேயே ஊரிலிருந்து தகவல் வந்து, வீட்டிற்கு சென்றதாகவும், மனைவி இறந்த நிலையில் இருப்பதாகவும், மற்றவர்கள் தான்தான் மனைவியின் இறப்பிற்கு காரணம் என்று சொன்னார்கள். எதிரியின் வாக்குமூலத்தை பதிவு செய்து, நான் காவல் துறைக்கு அனுப்பினேன். தனலட்சுமியின் மரணத்தில் பணம், நகை தொடர்பான வரதட்சனை கொடுமை இல்லை எனவும், எதிரி செல்வம் அவர்களுடைய மனைவி இறப்பிற்கு அவரே காரணம் என வாக்குமூலம் கொடுத்துள்ளார் என தெரிவித்து, விசாரணை அறிக்கை அனுப்பினேன். நான் 21-09-2019 ல் அனுப்பிய விசாரணை அறிக்கை சாட்சிகளின் வாக்குமூலங்களுடன் கூடியது அ.சா.ஆ.11 ஆகும்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் –**

இராணிப்பேட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் என்ற முறையில் நான் விசாரணை செய்தேன் என்றால், சரிதான். வருவாய்த்துறை நிலை ஆணையின் படி நான் விசாரணை செய்தேனா என்றால், நான் குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி தான் விசாரணை செய்தேன். உட்கோட்ட நிர்வாக நடுவருக்கு விசாரணை செய்ய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் அதிகாரம் இல்லை என்றும், வருவாய் நிலை ஆணையின் படி நான் விசாரணை செய்ய வேண்டும் என்றும் சொன்னால், அது சரியல்ல. 18-09-2019 அன்று வாலாஜா அரசு மருத்துவமனைக்கு மாலை 4.40 மணிக்கு சென்றேன். விசாரணை

செய்யுமாறு அன்று மாலை 4.30 மணிக்கு இராணிப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் இருந்து எனக்கு வேண்டுகோள் வந்தது. அந்த வேண்டுகோள் கடிதத்தை நான் பெற்றுக்கொண்டு, நான் ஒப்புதல் கடிதம் அளித்தேனா என்றால், ஒப்புதல் கடிதம் அளிக்கும் பழக்கம் இல்லை. வருவாய் நிலை ஆணையின் படி எந்த கடிதம் பெற்றாலும், அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என உள்ளது என்றால், எனக்கு நினைவில்லை. இந்த வழக்கில் கடிதம் பெற்றதற்கு, ஒப்புதல் கடிதம் நான் கொடுக்கவில்லை. 18-09-2019 அன்று மாலை 5 மணிக்கு பிரேத விசாரணை முடித்தேன். பிரேத விசாரணை செய்த போது, அனந்தலை கிராம நிர்வாக அதிகாரியை வாலாஜா அரசு மருத்துவமனைக்கு வருமாறு அழைத்தேனா என்றால், எனக்கு நினைவில்லை. ஆனால், பிரேத விசாரணையின் போது வாலாஜா கிராம நிர்வாக அலுவலர் என்னுடன் இருந்தார். இறந்த தனலட்சுமியை அனந்தலை கிராம நிர்வாக அலுவலர் தான் சட்டப்படி அடையாளம் காட்ட வேண்டும் என்றால், சரியல்ல. பஞ்சாயத்தார்கள் அடையாளம் காட்டினாலே போதும். அனந்தலை கிராம நிர்வாக அதிகாரியை நான் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை. 18-09-2019 அன்று தாயார் செய்த பிரேத விசாரணை அறிக்கையை அன்றே சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு அனுப்பினிர்களா என்றால், ஆமாம். சாட்சி மீண்டும் பிரேத ஆய்வு அறிக்கையை பிரேத விசாரணை அறிக்கையுடன் சேர்த்து அனுப்பியதாக கூறுகிறார். சாட்சிகள் கண்ணன், பாப்பாத்தி, செல்வம், முனிசாமி, மார்க்கப்பந்து, பெருமாள், கிருஷ்ணன், தொம்மரதாத்தா ஆகியோர்களின் வாக்குமூலங்களை என் அலுவலகத்தில் வைத்து, என்னுடைய உதவியாளர்கள் என் மூன்பு பதிவு செய்தார்கள். சாட்சிகள் கண்ணன் மற்றும் பாப்பாத்தி வாக்குமுலங்களை கையால் யார் பதிவு

செய்தார்கள் என்று அதில் கண்டுள்ளதா என்றால், இல்லை. அந்த வாக்குமூலத்தில் அதை பதிவு செய்த எனது அலுவலக முதுநிலை வருவாய் உதவியாளர் திருமதி.வரலட்சுமி சுருக்கொப்பம் செய்துள்ளார். வரலட்சுமி என் மேற்பார்வையில் நான் சொல்ல சொல்ல வாக்குமூலத்தை பதிவு செய்ததாக அதில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். சாட்சிகள் கண்ணன் மற்றும் பாப்பாத்தியை யார் எனக்கு அடையாளம் காண்பித்தார்கள் என்று வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால், எனக்கு நினைவில்லை. எதிரி செல்வம் கொடுத்ததாக சொல்லும் வாக்குமூலத்தை யார் கணினியில் தட்டச்சு செய்தார்கள் என்று அதில் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். சாட்சிகள் கண்ணன், பாப்பாத்தி மற்றும் எதிரி செல்வத்தை என் அலுவலகத்திற்கு யார் அழைத்து வந்தார்கள் என்றால், அவர்களை காவல் துறையினர் என் அலுவலகத்திற்கு அழைத்து வந்தனர். செல்வம் எந்த இடத்தில் என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார் என்று அதில் இல்லை என்றால், சரிதான். ஆனால், என் அலுவலகத்தில் வாக்குமூலம் கொடுத்தார். அவ்வாறு என் அலுவலகத்தில் கொடுத்ததாக இல்லை என்றால், சரிதான். அ.சா.ஆ.10 யை என் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி வரலட்சுமி அவர்கள் பதிவு செய்துள்ளார். அதில் அவர் கையெழுத்திட்டுள்ளார். அ.சா.ஆ.10 ல் உள்ள கைரேகை யாருடைய கைரேகை என கைரேகைக்கு பக்கத்தில் எழுதப்படவில்லை என்றால், சரிதான். சாட்சி தானாக கூறுவதாவது சாட்சி எண்.4 கிருஷ்ணன் கைரேகை தான் அது. அ.சா.ஆ.11 ல் இராணிப்பேட்டை காவல் ஆய்வாளருக்கு நான் சார் ஆட்சியர் என்ற முறையில் 21-09-2019 அன்று அனுப்பிய கடிதத்தில் நாள் 18-09-2019 என்பதில் 18 ம், செல்வம் என்ற பெயரும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால்,

சரிதான். அவ்வாறு திருத்தங்கள் செய்ததற்கு என்னுடைய கையெழுத்து பெறப்படவில்லை என்றால், சரிதான். நான் இந்த வழக்கு சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக இறந்த தனலட்சுமி வசித்த கிராமத்தை சார்ந்த கிராம நிர்வாக அலுவலரையோ, கிராம உதவியாளரையோ நான் விசாரிக்கவில்லை. நான் காவல் துறை அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரிலும், இறந்த நபர் பழங்குடியினர் வகுப்பை சார்ந்தவர் என்பதாலும், எதிரி கொடுக்காத வாக்குமூலத்தை எதிரி கொடுத்தது போல் தாயார் செய்து, போலீசாரின் உதவியுடன் கையெழுத்து பெற்றேன் என்றால், சரியல்ல. அ.சா.ஆ.10, 11 ஆவணங்கள் என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றாலும், என்னிடம் தயார் செய்து கொடுத்த அந்த ஆவணங்களை சரியாக பார்க்காமல், கையெழுத்து மட்டும் போட்டேன் என்றால், சரியல்ல. அ.சா.ஆ.10, 11 ஆவணங்களை நிராகரிக்க வேண்டும் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.